செய்தி வெளியீடு எண்: 539 நாள் : 07.10.2013

# ஐந்து நிலைகளில் நடைபெற்ற கூட்டுறவு தேர்தல் முடிவுற்றது

## 21027 சங்கங்களில் 204889 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்வு

### கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழகத்தில் ஐந்து நிலைகளில் திட்டமிடப்பட்டு நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலில் ஐந்தாம் நிலை தேர்தல் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு முடிவடைந்துள்ளது எனவும், மொத்தம் 21027 சங்கங்களில் 204889 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் திரு. ம. ரா. மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

### ஐந்து நிலைகளில் தேர்தல்

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் பிற செயல்பதிவாளர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டில் செயல்படும் 22552 சங்கங்களுக்கு ஐந்து நிலைகளில் தேர்தல் நடைபெறும் என்றும் முதல் நிலையில் உள்ள 22212 சங்கங்களுக்கு 4 கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என்றும் 4.3.2013 அன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இதன்படி முதல் நிலையில் 22212 சங்கங்களுக்கான தேர்தல் 04.03.2013-ல் தொடங்கி 06.05.2013 அன்று முடிவு பெற்றது. இரண்டாம் நிலையில் 198 சங்களுக்கான தேர்தல் 09.05.2013 தொடங்கி 10.06.2013ல் முடிவு பெற்றது. மூன்றாம் நிலையில் 83 சங்களுக்கான தேர்தல் 13.06.2013ல் தொடங்கி 15.07.2013ல் முடிவு பெற்றது. நான்காம் நிலையில் 58 சங்கங்களுக்கான தேர்தல் 18.07.2013ல் தொடங்கி 23.08.2013ல் முடிவு பெற்றது. இறுதியாக ஐந்தாம் நிலையில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கான தேர்தல் 31.08.2013ல் தொடங்கி 04.10.2013ல் முடிவு பெற்றது.

### தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத் தேர்தல் – நிலை-5

தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள் - 21 பேர். இதில் பொது-11; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்-4; பெண்கள்-6. 4.10.2013 அன்று நடைபெற்ற தேர்தலில் திருமதி. அமுதா அருணாச்சலம் தலைவராகவும், திரு. கணேசராஜா, துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 7.10.2013 அன்று பொறுப்பேற்றனர்.

.....2

**204889 நிர்வாகக்குழு உறுப்பினர்கள்**

ஐந்து நிலைகளில் நடைபெற்ற இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலில் மொத்தம் 21027 சங்கங்களிலிருந்து 204889 பேர் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 29235 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டின் கீழும் 57246 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும் 118408 பேர் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 1462 சங்கங்களில் உறுப்பினர்கள் யாரும் போட்டியிட முன்வராததாலும், இவை செயலிழந்த நிலையில் உள்ளதாலும் இவற்றை கலைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
மேலும் 63 சங்கங்களில் நீதிமன்ற வழக்குகள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளால் தேர்தல் நடைபெறாமல் நிலுவையாய் உள்ளது. இவற்றிற்கு தனியே தேர்தல் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது,

**20993 தலைவர்கள்**

ஐந்து நிலைகளில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலில் மொத்தம் 20993 பேர் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 1223 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர் ஆவர். 2576 பேர் பெண்கள் ஆவர். 17194 பேர் பொதுப்பிரிவினர் ஆவர்.

**20996 துணைத் தலைவர்கள்**

ஐந்து நிலைகளில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலில் மொத்தம் 20996 பேர் துணைத் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 1639 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர் ஆவர். 3357 பேர் பெண்கள் ஆவர். 16000 பேர் பொதுப்பிரிவினர் ஆவர்.

**இடஒதுக்கீடு**

கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மட்டுமே இடஒதுக்கீட்டின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நிர்வாகக்குழு உறுப்பினர் எண்ணிக்கையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவருக்கு 18 சதவிகிதமும், பெண்களுக்கு 30 சதவிகிதமும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதி இடங்கள் பொதுப்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. தலைவர் தேர்தலிலோ அல்லது துணைத்தலைவர் தேர்தலிலோ இடஒதுக்கீடு முறை அமலில் இல்லை. ஆயினும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவரும், பெண்களும் பெருமளவில் கூட்டுறவுச் சங்கங்களில் தலைவர்களாகவும், துணைத்தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

.....3

## காலிப்பணியிடங்களை நிரப்புதல்

ஏற்கெனவே தேர்தல் நடைபெற்று முடிந்து நிர்வாகக்குழு பொறுப்பில் இருந்துவரும் கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இறந்துவிட்டதாலோ அல்லது ராஜினாமா செய்ததனாலோ அல்லது தகுதி இழப்புக்கு உள்ளானதாலோ ஏற்பட்ட காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் தேர்தல் அறிவிப்பினை வெளியிட்டிருந்தது. அதன்படி செப்டம்பர்'2013ல் தேர்தல் நடத்தப்பட்டு **3787** சங்கங்களில் **7479** நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## புதிதாக துவக்கப்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல்

தமிழகத்தில் பால்வளத்துறை ஆணையரின் கட்டுப்பாட்டில் புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மாதம் தோரும் துவங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு துவங்கப்படும் புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை நிர்வகிக்க நியமிக்கப்படும் இடைக்கால நிர்வாகக்குழுவின் பதவிக்காலம் ஆறு மாதங்கள் மட்டுமே ஆகும். அதற்குள் இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு முறையாக தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக்குழுவிடம் பொறுப்பு ஒப்படைக்கப்படவேண்டும். இவ்வாறு புதிதாக தோற்றுவிக்கப்பட்ட **1029** பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு செப்டம்பர் '2013ல் தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டது. இதில் **772** சங்கங்களில் மட்டுமே தகுதியான வாக்காளர்கள் இருந்ததால் இச்சங்கங்களுக்கு மட்டும் தேர்தல் நடத்தப்பட்டு **8473** நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த **772** சங்கங்களுக்கும் தலைவர் ஒருவரும், துணைத்தலைவர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள சங்கங்களில் உறுப்பினர்கள் வாக்களிக்க தகுதி பெறும்போது தேர்தல் நடத்தப்படும்.

## எதிர்காலப்பணிகள்

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் ஓர் நிரந்தரமான சட்டப்பூர்வ அமைப்பாகும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவதற்கென்றே தோற்றுவிக்கப்பட்ட இந்த அமைப்பு தொடர்ந்து வரும் தேர்தல்களை நடத்தும். தற்பொழுது தேர்தல் நடைபெற்று முடிந்துள்ள சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் இறந்துவிடுவதாலோ அல்லது ராஜினாமா

**......4**

செய்வதாலோ அல்லது தகுதியிழப்புக்கு உள்ளாவதாலோ அல்லது நம்பிக்கையில்லா தீர்மானம் போன்றவற்றால் பதவியிலிருந்து நீக்கப்படுவதாலோ ஏற்படக்கூடிய காலிப்பணியிடங்களை தேர்தல் நடத்தி பூர்த்தி செய்யும் பணியை இனி தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும். மேலும் புதிதாக தோற்றுவிக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் இடைக்கால நிர்வாகக்குழுவின் பதவிக்காலம் முடிவடைவதற்குள் இச்சங்கங்களுக்கு முறையாக தேர்தல் நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு இச்சங்கங்களின் நிர்வாகத்தை ஏற்கும் வண்ணமும் இனி ஆணையம் செயல்படும்.

<u>நடந்து முடிந்த தேர்தலின் சிறப்புகள்</u>

தமிழகத்தில் உள்ள அனைத்து வகை மற்றும் அனைத்து நிலை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஆணையத்தினால் ஒரே நேரத்தில் தேர்தல் திட்டம் வகுத்து படிப்படியாக தேர்தல் நடத்தி முடித்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தை ஏற்று நடத்திக் கொண்டிருப்பது இதுவே முதல்முறையாகும். தமிழகத்தில் பெரு நகரங்கள், நகரங்கள் மற்றும் கிராமங்கள் ஆகிய அனைத்து இடங்களிலும் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட கூட்டுறவு சட்டத்திருத்தத்தின் பலனாக கூட்டுறவு ஜனநாயக அமைப்புகள் மலர்ந்துள்ளன. இதற்கு தமது பங்களிப்பை ஆற்றிய அரசு அலுவலர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், காவல் துறையினர், பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சிகள், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள் மற்றும் தொடர்புடைய அனைவருக்கும் ஆணையம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

மேற்கண்டவாறு தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா. மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

ஆணையர்

## ஐந்து நிலைகளிலும் தேர்தல் நடைபெற்று முடிந்த விபரங்கள்

| வ. எண் | மாநிலத் தேர்தல் அலுவலர் பெயர் | தேர்தல் நடத்த திட்டமிடப்பட்ட மொத்த சங்கங்கள் | தேர்தல் நடத்தப்பட்ட சங்கங்கள் | தேர்தல் நடத்த வாய்ப்பில்லாத சங்கங்கள் | இன்னமும் தேர்தல் நடத்தப்பட வேண்டிய | தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள நிர்வாகக்குழு உறுப்பினர்களின் | தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள தலைவர்களின் எண்ணிக்கை | தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள துணைத் தலைவர்களின் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 7422 | 7356 | 60 | 6 | 79090 | 7351 | 7350 |
| 2 | மீன்துறை இயக்குனர் | 1402 | 1392 | 3 | 7 | 9589 | 1392 | 1392 |
| 3 | இயக்குனர், கால்நடை பராமரிப்பு துறை | 107 | 105 | 2 | 0 | 735 | 105 | 105 |
| 4 | இயக்குனர், பால்வளத்துறை | 9852 | 8495 | 1345 | 12 | 86334 | 8485 | 8485 |
| 5 | இயக்குனர், சமூகநலத்துறை | 98 | 98 | 0 | 0 | 688 | 98 | 98 |
| 6 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 861 | 848 | 13 | 0 | 9174 | 847 | 847 |
| 7 | இயக்குனர், சர்க்கரைத்துறை | 17 | 16 | 0 | 1 | 276 | 16 | 16 |
| 8 | இயக்குனர், கைத்தறி (ம) தூணி நூல் துறை | 1368 | 1345 | 23 | 0 | 9090 | 1345 | 1345 |
| 9 | ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி (ம) ஊட்டச்சத்து துறை | 26 | 25 | 1 | 0 | 175 | 25 | 25 |
| 10 | முதன்மை செயல் அலுவலர் (ம) காதி கிராமியத் தொழில்கள் | 159 | 157 | 2 | 0 | 1050 | 157 | 157 |
| 11 | முதன்மை செயல் அலுவலர், பனைப்பொருள் வாரியம் | 740 | 740 | 0 | 0 | 5085 | 740 | 740 |
| 12 | இயக்குனர், பட்டு பூச்சி வளர்ச்சி துறை | 26 | 26 | 0 | 0 | 260 | 26 | 26 |
| 13 | இயக்குனர், வேளாண்மைத் தொழில் | 103 | 102 | 1 | 0 | 810 | 102 | 102 |
| 14 | ஆணையர், தொழில் (ம) வணிகத்துறை | 326 | 314 | 12 | 0 | 2478 | 296 | 300 |
| 15 | இயக்குனர், கிராம வளர்ச்சி (ம) பஞ்சாயத் ராஜ் | 45 | 8 | 0 | 37 | 55 | 8 | 8 |
| | கூடுதல் | 22552 | 21027 | 1462 | 63 | 204889 | 20993 | 20996 |

ஆணையர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9